## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## O.S.No.69/2023

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | மோகன் |
| தகப்பனார் / கணவர் | .. | சண்முகம் |
| வயது | .. | 54 |
| தொழில் | .. | பட்டுத்தறி |
| கிராமம் | .. | செய்யாறு |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி என் அப்பா என்றால் சரிதான். வடிவேல் என் தம்பி. உமா என் அக்கா. துளவி என் தங்கை ஆவார்கள். வழக்கு சொத்துக்கள் கூட்டுகுடும்ப சொத்துக்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்து 1 முதல் 3 ஆவணங்கள் தவிர வேறு எதுவும் தாக்ல செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் சின்ன நாடாருக்கு சொந்தம் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி என் அப்பா தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான், ஆனால் நான் 15 வயதில் இருந்து சம்பாதித்து கொடுத்து வாங்கியது, அதற்கு ஆவணம் இல்லை. என் தந்தை என் பெயரிலும், என் தம்பி பெயரிலும் தனித்தனி செட்டில் மெண்ட் எழுதியுள்ளார்என்றால் சரிதான். அதன்அடிப்படையில் அனுபவித்து வருகிறோம். மேற்படி இரண்டு வீட்டு மனை சொத்துக்களை இவ்வழக்கில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்தில் 1, 2 சொத்துக்களை 12.10.1983 ல் பால கவுண்டர் குமாரர் வரத கவுண்டர் 1ம் பிரதிவாதியான என் தந்தை கிரையம் பெற்றார் என்றால் இல்லை. தாவா 1வது அயிட்ட சொத்தில் 3 சொத்து துளசி என்பவரிடம் இருந்து 30.09.2009 அன்று 1ம் பிரதிவாதியான என் தந்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான், அனைத்தும் நான்

சம்பாதித்து கொடுத்து வாங்கியது. தாவா 4, 5 அயிட்ட சொத்துக்கள் என் அம்மா பெயரில் உள்ள சொத்து என்றால் சரிதான். நான் என் அம்மா சேர்ந்து தான் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். 2011 ஆம் ஆண்டு என் அம்மா இறந்துவிட்டார். பூர்விக சொத்தை விற்று தான் என் அம்மா பெயரில்சொத்து வாங்கியதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் 07.07.1980 ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அம்மா சொத்தை நானும், வடிவேல், உமா ஆகியோர் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். 29.07.2013 அன்று அக்கு விடுதலை பத்திரம் நான் எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை, நான் கையொப்பம் மட்டும் செய்தேன். நான் மேற்படி பத்திரத்தில் 1ம் பிரதிவாதி, 3 பிரதிவாதி கையொப்பம் செய்துவிட்டு தற்போது மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் எழுதிக் கொடுத்த அக்குவிடுதலை பத்திரத்தின் அடிப்படையில் 4, 5 அயிட்ட சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு 3/5 பாகமும், அவருக்கு உரிமை உள்ள 1/5 பாகமும், ஆக 1ம் பிரதிவாதிக்கு 4/5 பாகம் உரிமை உள்ளது என்றும், மீதம் உள்ள 1/5 பாகம் துளசிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் அக்குவிடுதலை எழுதியபோது படித்துபார்த்து தான் கையொப்பம் செய்துவிட்டு 13 வருடங்கள் கழித்து பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தில் 6 வதுசொத்து 09.08.2010 ல் என் அப்பா கண்ணன் மகன் பழனி என்பவரிடம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான், ஆனால் நான் சம்பாதித்து கொடுத்தேன். தாவா 2வது அயிட்ட சொத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தானது 1 அயிட்ட சொத்தில் 4, 5 அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 3வது அயிட்ட சொத்து பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பாவிற்கு உடன்பிறந்தவர் ஆறுமுகம் என்றால் சரிதான். தாவா 3வது அயிட்ட சொத்து என் அப்பாவிற்கும் உடன்பிறந்தவர் ஆறுமுகம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ஆறுமுகம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆறுமுகத்தின் மனைவி ஞானம்மாள், அவருடைய வாரிசுகள் நித்யா, ராணி, சந்திரமோகன், கலைச்செல்வி மற்றும் பழனி இருக்கிறார்கள் என்றால் இருக்கிறார்கள். என் அப்பாவும், ஆறுமுகத்தின் வாரிசுகள் சேர்ந்து 68 செண்ட் கோதண்டம் மகன் தினகரனுக்கு 05.01.2023 அன்று விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அதே தினகரனுக்கு 01.02.2023 அன்று 1 ஏக்கர் 38 செண்ட் விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். தாவாவில் உள்ள 3 அயிட்ட சொத்து முழுமையாக விற்பனை செய்யப்பட்டு தினகரன் பெயரில் பட்டா மாற்றம் செய்து, அவர்

அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான். தினகரனை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்தேனா என்றால் இல்லை. தாவா 1 வது அயிட்ட சொத்துக்கள் என் அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றும் அதில் யாரும் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. என் தம்பிக்கு உயில் எழுதி வைத்ததாக சொல்லும் நிலையில் எனக்கு உயில் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. அதே தேதியில் எனக்கு எழுதிய உயிலை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வடிவேலுக்கு எழுதிக்கொடுத்ததை தான் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா எனக்கு உயில் எழுதி வைத்த சொத்தை தாவாவில் காண்பிக்கவில்லை என்றால் தெரியாது. எனக்கு எழுதி வைத்த சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தடையுத்தரவு கேட்கமுடியாது என்றால் சரியல்ல. அதேபோல அக்குவிடுதலை பத்திரத்திற்கு ரத்துசெய்ய கோரமுடியாது என்றால் சரியல்ல. உயில் எழுதிய நபர் உயிருடன் இருக்கும் போது அவர் எழுதிய உயிலை ரத்து செய்ய கோரமுடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**